சிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவ

|| श्री: ||

शिवचिदम्बरम्

நெரூர் ஸ்ரீ வித்யா ந்ருஸிம்ஹ ஆஸ்ரமம்

பரமஸாம்பவ **ஸ்ரீஸ்ரீஸ்ரீ வித்யாஶங்கரசரஸ்வதி ஸ்வாமிகள்** அருளிய

ஆசியுரை

நமது மிக அபிமான **வைதிகஸ்ரீ ராஜகோபால கனபாடிகளுக்கும்** ஆஸ்திக அன்பர்களுக்கும் மஹாதேவ ஸ்மரண பூர்வக ஆசிர்வாதங்கள்.

நமது வைதிகஸ்ரீயின் ஆண்டு விழாவிற்கு நேரில் அந்வயிக்க முடியாவிட்டாலும் மனது இங்குதான் உள்ளது. இந்த வைதிகஸ்ரீயின் ப்ரவேசம் எங்கெங்கு உள்ளதோ அங்கு வைதிக தர்மகோஷ ப்ரசாரம் நடந்துகொண்டே இருக்கிறது. இனிமேலும் நடக்கும்.

வைதிகஸ்ரீயை ஆச்ரயித்தால் தான் மோக்ஷஸ்ரீ நம்மை ஆச்ரயிப்பாள். இக்கலிகாலத்தில் நாம் யார், நம் தர்மம் என்ன, போன்ற விஷயங்களை புன: புன: ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான் ஸன்மார்கத்தில் இருந்து நழுவாமல் இருக்க அதுஉதவும். வைதிகஸ்ரீயின் எல்லா கட்டுரைகளுக்கும் விஷயதானமும் மிகவும் ச்லாகிக்க வைப்பவை. அதில் "**ஸத்யம் ப்ரூயாத், ப்ரியம் ப்ரூயாத் - ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம்**" என்னும் வசனத்திற்கேற்ப, "**ப்ளீஸ் வேண்டாமே**", என்னும் பகுதி மிக மிக விசேஷமானது. ஏனெனில், தர்மாசாரணை குறைந்துள்ள நிலையில்ஒருவனின் மனப்போக்கிற்கு ஏற்று மிகவும் ஹிதமாக சொல்லும் பகுதி அது. இன்னும் அதிக விஷயங்களும் தர்மபோதனைகளும் அதிகம் இருக்கின்றன. இந்த மஹோன்னத கார்யம் ஈச்வர கைங்கர்யம் ஆகும்.

"**யோ வேதாதௌஸ்வர:ப்ரோக்தோ**" என்ற படி அவரின் கட்டளைகளை ச்செய்தும் செய்யச்சொல்லி அறிவுறுத்துவதுமே வைதிகஸ்ரீயின் முக்கிய ஸித்தாந்தமாகும். அதேபோல இந்த வைதிகஸ்ரீயின் வளர்ச்சிக்கு ஆஸ்திக அன்பர்களின் ஆதரவும் ஸ்ரீகனபாடிகள், அவரது குடும்த்தார் மற்றும் சிஷயர்களின் ப்ரயத்ன பரிச்ரமமுமே காரணங்கள்.

இந்த ஸமயத்தில் ஒரு ச்லோகம் நினைவிற்கு வருகிற்து

"உபௌ தௌ விச்ருதௌ லோகே ஸ யதா சம்புரீச்வர: |

தீக்ஷிதா அப்பய்ய ஜ்வான: சாஸ்த்ரிணோ ராஜு சாஸ்த்ரிண || "

அர்த்தம் ஈச்வரன் என்ற சொல் எப்படி பரமசிவனையே குறிக்குமோ அதேபோல தீக்ஷிதர் என்ற சொல் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரையே குறிக்குமோ, சாஸ்த்ரிகள் என்ற மாத்ரதில் மன்னார்குடி ராஜு சாஸ்த்ரிகள் நினைவு தான் லோகத்தில் ப்ரஸித்தமாக ஏற்படுகிறது .அப்படி ப்ராத: ஸ்மரணிய ஸ்ரீ மன்னார்குடி பெரியவாளின் பெயரும் நம் கனபாடிகளின் பெயரும் ஒன்றே. ஸ்ரீமன்னார்குடி பெரியவர்களால் தான் அக்காலத்தில் சாஸ்த்ர ப்ரசாரம் ஏற்பட்டது. அது போல் நம் ஸ்ரீகனபாடிகளாலும் வைதிக தர்ம ப்ரசாரம் நடந்துகொண்டு இருக்கிறது. இந்த தர்ம ப்ரசாரம் என்றும் நடந்து, எல்லோரிடத்திலும் வைதிகஸ்ரீ ஜ்வலிக்கட்டும் என்று ஹரிப்ருஹ்மாதி ஸகல தேவதா அந்தர்யாமியும் விப்ர ஆராத்யனும் ஸ்ரீபரதேவதாபதியுமான ஸ்ரீமஹாதேவனை ப்ரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம் !!

மன்மத வருஷம்,

வ்ருச்சிக சுக்லபக்ஷதசமி,

20-12-2015

மஹாதேவ ஸ்மரணங்களுடன்,

பரமஸாம்பவ

ஸ்ரீ ஸ்ரீ வித்யாஶங்கரசரஸ்வதி

சிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவசிவ